2012 பிறந்தவர்கள் பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.

1. **செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு.** (குறள் 86)

எமது வீட்டுக்கு வருவோரை அன்போடு வரவேற்க வேண்டும். அகத்தால் மிக மகிழ்ந்து அன்போடு உணவளிக்க வேண்டும்.

2. **மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

**அற்றது போற்றி உணின்.** (குறள் 942)

உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றிய பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

3. **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக.** (குறள் 391)

ஐயங்கள் ஏதுமின்றித் தெளிவாகக் கல்வி கற்க வேண்டும். கற்றதற்கு ஏற்ப, நாம் நடந்து கொள்ள வேண்டும்.

4. **இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**

**வன்சொல் வழங்கு வது.** (குறள் 99)

இனிய சொற்களையே பேச வேண்டும். கடுமையான சொற்களைத் தவிர்க்க வேண்டும்.

5. **அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை**

**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.** (குறள் 135)

பொறாமை உடையவனிடம் செல்வம் சேர்வதில்லை. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடத்து உயர்வு இல்லை.

6. **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**

**நன்மை கடலிற் பெரிது.** (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**7. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.** (குறள் 524)

தன் சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி வாழ்வதே ஒருவன் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஆகும்.

**8. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்.** (குறள் 393)

கண்ணுடையவர் என்று சொல்வதற்குரியவர் கற்றவரே. கல்லாதவர் தங்களுடைய முகத்தில் இரண்டு புண்களை உடையவராவர்.

**9. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே**
**பசும்புல் தலைகாண்பது அரிது.** (குறள் 16)

வானிலிருந்து மழை பெய்யாவிட்டால், இவ்வுலகில் பசுமையான புல்லின் நுனியைக் கூடக் காணமுடியாது.

**10. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.** (குறள் 396)

மணல் உள்ள இடத்தில் கேணி தோண்டிய அளவிற்கேற்ப நீர் ஊறும். அதுபோல, மக்களுக்கு அவர்கள் கற்ற அளவுக்கேற்ப அறிவு பெருகும்.